திரு. க. சுப்பு : தலைமறைவாக இருந்து போராடவில்லை நாங்கள் நேர்முகமாகப் போராடினோம் அதுதான் வித்தியாசம்.

திரு. என். சங்கரய்யா : நான் இதை, அவர் குறிப்பிட்டதினாலேதான் சொல்லவேண்டி வந்தது. இன்றைக்கு எதேச்சாதிகார சக்தி இந்திய அரசியலில் தலைதூக்க முயற்சித்தால், அதைத் தடுப்பது தான் இந்திய நாட்டிற்கும் ஜனநாயகத்திற்கும் நல்லது என்ற முறையிலேதான் மாநில கட்டத்திலே சர்க்காருக்கும் எங்களுக்கும் உள்ள பிரச்சினைகள் அரசியல் பின்னணியில் மாநிலப் பிரச்சினைகள் என்று ஒதுக்கப்படுகின்றன. அகில இந்திய அளவிலே விதியை தீர்மானிக்கக்கூடிய முறையிலே ஜனநாயகத்திற்கு ஏற்றவாறு தேர்தல் கொள்கைகள் வைக்கப்படுகின்றன. அந்த முறையிலே ஜனநாயக சக்திகள் எல்லாம் சேர்ந்து செயலாற்றுகிற முறையிலே நம்முடைய அரசாங்கமும், ஆளுங்கட்சியான அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகமும் சேர்ந்து மக்கள் மத்தியிலே ஏழைஎளியமக்களுக்கும், தொழிலாளர்களுக்கும் மத்திய தர மக்களுக்கும் தங்களுடைய கொள்கை சாதகமாக அமைந்திருக்கிறது என்பதை அறிவிக்க வேண்டுமென்று கூறி அமைகிறேன்.

## 4. அமைச்சரின் அறிக்கை.

### தொடக்கப்பள்ளி ஆசிரியர்களது கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே திரு. ஜே. என். இராஜு தலைமையில் அமைந்த தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணி தமது 10 அம்ச கோரிக்கையை வலியுறுத்தி கிளர்ச்சி செய்து வருகிறார்கள்.

இந்த அரசு பொறுப்பேற்ற பின்னர் ஆசிரியர்களுடைய பல்வேறு நெடு நாளைய கோரிக்கைகளை பரிவுடன் கவனித்து நிதி நிலை இடம் தருவதற்கேற்ப அவற்றுள் பலவற்றை நிறைவேற்றி வந்திருக்கிறது. தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி தலைவர் திரு. இராசு, செயலாளர் திரு. ஈஸ்வரன் முதலியோருடனும் மற்றவர்களுடனும் நான் நேரடியாக இவை பற்றி கலந்து விவாதித்துள்ளேன். இப்போது போராட்டம் நடத்தி வரும் தொடக்கப்பள்ளி ஆசிரியர் கூட்டணி கொடுத்துள்ள பல கோரிக்கைகளை அரசு கவனத்துடனும் அனுதாபத்துடனும் பரிசீலித்து கீழே கண்ட முடிவுகளை அறிவிக்கிறது :—

(i) ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஆசிரியர்களாக்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. இதை அவ்வளவு எளிதில் ஏற்றுக் கொள்ள இயலாது. இது ஒரு பெரிய கொள்கை

1979 அக்டோபர் 30] [திரு. செ. அரங்கநாயகம்]

பற்றிய பிரச்சினை. சம்பந்தப்பட்ட அனைவரையும் கலந்தாலோசித்து முடிவு காண வேண்டிய பொருளாக இது இருக்கிறது. 1958 ஊராட்சிச் சட்டத்திற்கே மாறுபட்டும் இக்கோரிக்கை உள்ளது. எனவே இது பற்றி உடனடி முடிவு எடுக்க முடியாது.

அரசு ஊழியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து சலுகைகளையும் உள்ளாட்சித் துறை மற்றும் தனியார் துறை தொடக்கப்பள்ளி ஆசிரியர்களுக்கும் அளிக்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. சம்பளம், படிகள், விடுப்பு, வசதி ஓய்வூதியம், பணிக் கொடை, குடும்ப ஓய்வூதியம் ஆகிய விஷயங்களில் அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு உள்ள அனைத்து சலுகைகளும் ஏற்கனவே அரசு அல்லாத பள்ளி ஆசிரியர்களுக்கும் தரப்பட்டு வருகின்றன. இன்னும் அரசு அல்லாத மற்றைய பள்ளி ஆசிரியர்களுக்கு விரிவாக்க வேண்டியிருக்கும் சலுகைகள் ஒரு சிலவே.

(ii) கிராமப் புறங்களிலுள்ள ஆசிரியர்களுக்கு வீடு கட்டுவதற்கான கடன் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் கூட்டுறவு சங்கங்கள் மூலம் தரப்பட்டு வருகிறது. இது வரை இத்திட்டத்தின் கீழ் சுமார் 940 ஆசிரியர்கள் வீடு கட்ட கடன் ரூ. 30 இலட்சம் வரை பெற்றுள்ளனர். இத்திட்டத்தை மேலும் விரிவாக்கி அதிக ஆசிரியர்கள் பயன் பெறுமாறு ஆசிரியர்களுக்கு என்று தனி ஒதுக்கீடு செய்யப்பட்டு வழங்க அரசு உத்தேசித்துள்ளது.

(iii) திருமணக் கடன்கள் ஆசிரியர்களுக்கும் வழங்கப்பட வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. ஊராட்சி ஒன்றியங்களில் நிதி நிலை பற்றாக் குறை இருப்பின் ஒன்றிய பள்ளி ஆசிரியர்களுக்கு இவ்வசதி பரவலாகக் கிடைக்க முடியாமல் போகிறது என சொல்லப்படுகிறது. அவர்கட்கு இவை கிடைக்கும் வகையில் திருமண கடனுக்காக அதிக அளவில் நிதி ஒதுக்கம் செய்ய திட்டம் நிதித் துறையுடன் கலந்து பரிசீலிக்கப்படும்.

(iv) சைக்கிள்கள் வாங்க ஆசிரியர்கட்கு அரசு நிதியிலிருந்தே நிதி வழங்க வேண்டுமென்ற கோரிக்கை மிகவும் நியாயமானது. ஆசிரியர்கள் சைக்கிள்கள் பெற்று அவரது பணியினை விரைவாக செய்யும் வாய்ப்பை அவர்கட்கு இவ்வரசு வழங்க உத்தேசித்து அவர்களுக்கு சைக்கிள் வாங்குவதற்கான முன் பணம் தர அரசாங்க நிதியிலிருந்து நிதி ஒதுக்கம் செய்ய இவ்வரசு தீர்மானித்துள்ளது.

[திரு. செ. அரங்கநாயகம்] [1979 அக்டோபர் 30

(v) கைத்தறி துணி கடன் வசதி தடங்கலின்றி அளிக்கப் பட வேண்டுமென்பது மற்றொரு கோரிக்கை :

அவர்களுக்கு கடனில் கைத்தறித் துணி வாங்குவதற்கான திட்டம் ஒன்றும், கைத்தறி துணி நிறுவனத்துடன் (co-optex) கலந்து (தக்க கடன் வழங்கும் திட்டம்) உருவாக்கப்படும். இது ஆசிரியர்கட்கு மிகவும் பண பயன் விளைவிக்கும் திட்டமாக அமையும் என நம்புகிறேன்.

(vi) ஆசிரியர்களுக்கும் அரசு ஊழியர்களுக்குள்ளது போல் இலவச மூக்குக் கண்ணாடி அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் இவ்வரசு ஏற்றுக்கொள்ளுகிறது. மக்களுக்கே கல்விக் கண் அளிக்கும் ஆசிரியருக்கு இலவச மூக்குக் கண்ணாடிகள் வழங்க இவ்வரசு தீர்மானித்துள்ளது. அரசு பணியாளர்களில் 'சி' மற்றும் 'டி' பிரிவினருக்கு தற்போது மூக்குக்கண்ணாடி வாங்க பணம் உதவி செய்யப்படுவது போல அதே நிபந்தனைகளுக்குட்பட்டு உள்ளாட்சித் துறை மற்றும் தனியார் துறையைச் சேர்ந்த ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசு நிதியிலிருந்தே இலவசமாக கண்ணாடிகள் வாங்கிக்கொள்ள உதவிச் செய்யப்படும்.

(vii) கல்வியின் தரத்தை உயர்த்த இவ்வரசு பல முன்னோடித் திட்டங்களை எடுத்துச் செயல்படுத்தி வருகிறது. இளநிலை ஆசிரியர்கட்குப் பதில் இடைநிலை ஆசிரியரே ஆரம்பப் பள்ளிகளில் இயங்க வேண்டுமென்ற நோக்குடன் இளநிலைப் பயிற்சியைக் கூட முன்பே தமிழக அரசு நீக்கி விட்டது எனினும் இன்று பணியிலுள்ள இளநிலை ஆசிரியர் பலர் இடைநிலை எய்த முடியாத நிலையில் உள்ளனர். பல ஆண்டுகளாக எல்லா ஆரம்ப ஆசிரியர் சங்கங்களும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு வற்புறுத்திவந்துள்ளனர். இப்போது திரு. ஜே. எஸ். இராசு தலைமையில் அமைந்த தமிழ்நாடு தொடக்கப் பள்ளி ஆசிரியர் கூட்டணியினரும் இதை ஒரு முக்கிய கோரிக்கையாக வைத்துப் போராடி வருகின்றனர். இப்பிரச்சினையின் அவசரத்தையும், அவசியத்தையும் உணர்ந்த இன்றைய தமிழக அரசு எல்லா இளநிலை ஆசிரியரும் இடைநிலை ஆசிரியராக மாறுவதற்கு வாய்ப்பளிக்கும் ஒரு சீரிய திட்டத்தை வருகிற நிதியாண்டிலிருந்து அமுல் படுத்த எண்ணியுள்ளது. தமிழக கல்வியாராய்ச்சி பயிற்சி நிறுவனம் (SCERT) — 'தகயாபதி') ஆசிரியர்கட்குப் பயிற்சி அளிப்பதில் சிறந்த பெயரைப் பெற்றுள்ளது. இந்நிறுவனத்தின் மூலம் இளநிலை ஆசிரியர்கட்கு பணி மூப்பின் அடிப்படையில் ஒரு ஐந்து மாத அஞ்சல் வழி— நேரடித் தொடர்பு பயிற்சி (contact cum-correspondence) மூலம் இடை நிலை உயர்வுப் பயிற்சி அளித்து இப்பயிற்சியில் தேறிய இளநிலை ஆசிரியர் யாவருக்கும் இடை நிலை உயர்வு கொடுக்க இவ்வரசு உத்தேசித்துள்ளது. இதற்கான இத்திட்டத்தைப் பள்ளிக்

1979 அக்டோபர் 30] [திரு. செ. அரங்கநாயகம்]

கல்வி இயக்குநர் விரைவில் அரசுக்கு அளிப்பார். இத்திட்டம் இளநிலை ஆசிரியர்கட்கு ஒரு பெரிய நல்வாய்ப்பாக அமையும் என்பது அரசின் திண்ணமான எண்ணம்.

(viii) ஊராட்சி ஒன்றியம் மற்றும் தனியார் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசு மருத்துவமனைகளில் இலவசமாக மருத்துவ வசதி அளிக்க ஏற்கெனவே ஆணை உள்ளது. அந்த ஆணைகளின்படி அவர்கள் மருத்துவ சிகிச்சை பெற யாதொரு கட்டணமும் முன்னதாக செலுத்த வேண்டியதில்லை. ஆனால் ஒன்றியங்களில் இவை ஆசிரியர்கட்கு எளிதாகக் கிடைப்பதில்லை என்றும், இவை கிடைக்கச் செய்ய வேண்டுமென்பதும் கூட்டணியின் ஒரு கோரிக்கை. இந்தச் சலுகைகள் ஆசிரியர்கட்கு தடங்கலின்றிக் கிடைக்க, மருத்துவத் துறை, ஊரக வளர்ச்சி, உள்ளாட்சித் துறை இவற்றுடன் கலந்து ஆவன செய்யப்படும். இச்சலுகையை சரிவர அளிக்க தவறிய அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

(ix) ''ஊரார் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன் பிள்ளை தானே வளரும்'' என்ற முதுமொழிக் கிணங்க தமிழகத்தின் ஆரம்ப ஆசிரியர்கள் அரும்பணியாற்றி வருகின்றனர். அவரது குழந்தைகட்கு பட்டப்படிப்பு வரை இலவசக் கல்வி வழங்க வேண்டுமென்ற கோரிக்கையையும் திரு. ஜே.எஸ். இராசுவின் தலைமையில் அமைந்த தமிழ்நாடு ஆரம்ப ஆசிரியர் கூட்டணியினரும் மற்றையோரும் வற்புறுத்தி வந்துள்ளனர். ''தமிழக ஆசிரியர் நல நிதி'' (Teachars Welfare Fund) மூலம் இதற்கென ஒரு திட்டம் தீட்டப்பட்டு வருகிறது.

(x) ஆரம்ப ஆசிரியர் பலர் பேருக்கத்துடன் தங்களது தகுதிகளை உயர்த்திக்கொண்டுள்ளனர். புதிய பதவிகள் உருவாகும்போது அவர்களுக்கு தகுதிக்கேற்ற பதவி வாய்ப்புக்களை அளிக்க வேண்டுமென்பது ஒரு கோரிக்கை. இவ்வரசு இதனைக் கொள்கை அளவில் ஏற்றுக்கொள்கிறது.

இதன் விளைவாக ஊராட்சி ஒன்றிய, நகராட்சி மன்ற, உயர் தொடக்கப் பள்ளிகளில் பி.டி. தேர்ச்சி பெற்று செகண்டரீ கிரேடு பணி செய்து வருவோருக்கு அவர்கள் எந்த பாடத்தில் பட்டப்படிப்புத் தேறி பி.டி. பயிற்சியும் பெற்று உள்ளனரோ அந்தப் பாடத்தைக் கற்றுத் தருவதற்கு அரசு உயர்நிலைப் பள்ளிகளில் பி.டி. ஆசிரியர்கள் காலியிடங்கள் ஏற்படும் போது இவர்களையும் கருத்தில் கொண்டு நியமனம் செய்ய வழி வகை வகுக்கப்படும். இதே போல் எல்லா உயர் தொடக்கப் பள்ளிகளிலும் எம்.ஏ., எம்.எஸ்.ஸி, படித்து பி.டி. படிப்பும் இருந்தால் இவ்வாசிரியர்களை மேல் நிலைப் பள்ளிகளிலும் கூட அவர்கள் படித்துள்ள பாடத்திற்குள்ள பணி இடங்களுக்கு அவர்கள் தகுதிக்கேற்ப நியமனம் செய்யவும் வழி வகை செய்யப்படும்.

ஆசிரியர் நலமும், திறமும் உயர அரசு அளிக்க இருக்கும் மேற் கண்ட சலுகைகளையும், திட்டங்களையும் சட்டப்பேரவை முன் அறிவிக்கிறேன்.

திரு. சென்னை மு. அரங்கநாதன் : பேரவைத் தலைவர் அவர்களே. நம்முடைய கல்வியமைச்சரவர்கள் சொன்னவற்றில் ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். (மணியடிக்கப்பட்டது).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அறிக்கையின் மீது விளக்கம் கேட்கக் கூடாது. அதுதான் முறை, மரபு கூட.

[பிற்பகல் 1-00]

3. அமைச்சரவையின் கொள்கையை நிராகரிக்கும் தீர்மானம்—விவாதம் (தொடர்ச்சி)

* திரு. ஏ. ஆர். மாரிமுத்து : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவந்திருக்கிற கண்டனத் தீர்மானத்தை ஆதரித்து காங்கிரஸ் கட்சியின் சார்பிலே எனது கருத்துக்களைத் தெரிவிக்க முன்வந்துள்ளேன். காங்கிரஸ் கட்சியின் சார்பிலேயும் கண்டனத் தீர்மானங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தக் கண்டனத் தீர்மானங்களின் பேரிலே என்ன பேசியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி —பேசுகின்றார்கள் என்பதைப்பற்றி மாண்புமிகு முதலமைச்சரவர்கள் அவையிலேயிருந்து கேட்டிருக்க வேண்டும். அவர்கள் அவையிலே இல்லாதது எங்களுக்கெல்லாம் பெரிய ஏமாற்றத்தை அளித்திருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். சட்டப் பேரவைக் கூட்டம் 6 மாதங்களுக்குப் பிறகு கூடியிருக்கிறது. 6 மாதம் என்பது இந்திய அரசியலிலே ஒரு சிறிய காலம் என்று சொல்ல முடியாது. சட்டப்பேரவைக் கூட்டம் முடிந்த பிறகு எத்தனையோ மாற்றங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

[மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் பி. எச். பாண்டியன் தலைமை]

அரசியலிலே என்னென்ன நிலைமைகள் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்றன என்பதையெல்லாம் பார்க்கும் போது வேகமான மாற்றங்கள் நாட்டிலே ஏற்பட்டுக் கொண்டிருக்கின்றன. இதனுடைய விளைவுகளை எல்லாம் நாம் பார்க்கிற பொழுது சட்டப் பேரவை உறுப்பினர்கள் அரசியல் ரீதியாக தங்களுடைய கருத்துக்களைத் தெரிவிப்பதற்கு வாய்ப்பாக அடிக்கடி சட்டசபை கூடுவது நலம். 6 மாதத்திற்கு ஒரு தடவைதான் கூட வேண்டுமென்ற நிலைமையை மாற்றி, ஆண்